In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi

S.C.No.129/2025

Deposition of P.W.7

| | |
|---|---|
| Name | திரு.பாரதிராஜா |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 29th day of September 2025.

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)

**முதல் விசாரணை :**

நான் முகம்மதுசாதலிபுரத்தில் வசித்து வருகிறேன். இறந்துபோன செல்லம்மாள் எனது அம்மா. எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்து வந்தார். கடந்த 13.12.2024 ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் எனது அண்ணன் பார்த்திபன் எனக்கு போன் செய்து அம்மாவை யாரோ கொலை செய்துவிட்டதாகவும் அம்மாவின் முகத்தில் தலையணை கிடந்ததாகவும் என்னிடம் தெரிவித்தார். நான் உடனே கிளம்பி எனது அண்ணனின் வீட்டிற்கு சென்றேன். எனது அம்மா மல்லாக்க படுத்த நிலையில் கிடந்தார். எங்கள் அம்மாவின் முகத்தில், கழுத்தில் நகக்கீறல்கள் இருந்தன. பின்னர் எனது அம்மாவின் இறப்பின் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி எனது அண்ணன் பார்த்திபன் புகார் கொடுத்தார். எதிரி சித்தப்பா மகன் அடிக்கடி அம்மாவுடன் சண்டை போடுவார். குடித்துவிட்டு வீட்டு வாசலில் பாட்டிலை உடைத்து போடுவான். அதனால் எதிரி மீது சந்தேகம் ஏற்பட்டு காவல் நிலையத்தில் முதலில் அண்ணன் தகவல் கொடுத்தார். பிறகு நாங்களும்

சொன்னோம். எனது அம்மாவின் தலை முடி களைந்த நிலையில் இருந்தது. கம்மல்சுரை கீழே கிடந்தது. எதிரி தான் எனது அம்மாவை ஏற்கனவே இருந்த பிரச்சனையை மனதில் வைத்து கொலை செய்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

ஆய்வாளர் இந்த வழக்கில் என்னை விசாரித்தார். விசாரணையின்போது எனது அண்ணன் எனக்கு 4 மணிக்கு தகவல் சொன்ன விவரத்தை சொல்லியிருக்கிறேன். அதேபோல சந்தேகத்தின்பேரில் அண்ணன் புகார் கொடுத்தார் என்ற விவரத்தையும் சொல்லியிருக்கிறேன். சாட்சி மகேஷ் ஆதிராஜா என்பவர் எங்கள் பகுதியை சார்ந்தவர் என்றால் சரிதான். சாட்சி சாந்தகுமார் என்பவரும் எங்கள் பகுதியை சார்ந்தவர் என்றால் சரிதான். அவர்களும் நானும் ஒன்றாக சாட்சியம் கொடுக்க நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறோம் என்றால் சரிதான். எனது அம்மா வசித்து வந்த வீடு 2005ல் கட்டப்பட்டது. எதிரி குடியிருந்த வீடு, கடற்கரை என்பவர் வீடு அதற்கு முன்னாடியே கட்டப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் எதிரி வீடு, கடற்கரை வீடு, பெரியப்பா வீடு உள்ளது என்றால் சரிதான். புகைப்படங்கள் 3 மற்றும் சாட்சிய சட்டப்பிரிவு 65Bன் படியான சான்று ஆகியவை **எ.சா.ஆ.1 வரிசை**. எதிரி அப்பாவிற்கு பாத்தியப்பட்ட வீட்டிற்கு தென்புறம் ஒரு அடி இடைவெளி இருந்தது என்றால் கிடையாது. எதிரியின் அப்பாவின் உடன்பிறந்தவர்கள் அண்ணன் ஆகியோர் பேட்ரிக் சர்ச் தெருவில் வசித்து வருகிறார்கள் என்றால் அப்பா, அம்மா வசித்து வருகிறார்கள். அண்ணன் எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. எதிரியை போலீசார் அவரது அப்பா, அம்மா வீட்டில் இருந்து பிடித்து

கொண்டு வந்தார்கள் என நான் கேள்விப்பட்டேனா என்றால் கேள்விப்படவில்லை. எதிரி என்னுடைய வீட்டிற்கு அருகில் குடியிருந்து வந்ததாக கூறுவது பொய் என்றாலும், எதிரிஅவரது அப்பா, அம்மாவுடன் வசித்து வந்தார் என்றாலும் சரியல்ல. எதிரியின் அப்பா வீட்டை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சாட்சி மகேஸ் ஆதிராஜா, சாந்தகுமார் ஆகியோர் எனக்கு வேண்டிய சாட்சிகள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல்அவர்கள் எங்களுக்கு பக்கத்தில் குடியிருக்கவில்லை என்றாலும், வேறு வேறு பகுதியில் குடியிருக்கிறார்கள் என்றாலும் சரியல்ல. எனக்கு 4 மணிக்கு அண்ணன் போன் செய்ததாகவும், நான் சம்பவ இடம் சென்றதாகவும் கூறியிருப்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. இறந்து போனவர் எனது அம்மா என்பதால் அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/—எம்.பி.முருகன்,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.

தட்டச்சு செய்தவர் – சு.கோமதி.